***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 206/2024 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | கவியரசன் |
| *Father Name* | வெள்ளிநாதன் |
| *Village* | ரெகுநாதபுரம் |
| *Age* | 29 |

**1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.01.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரில் வசித்து சேலத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி மணியன் மற்றும் 2, 3 எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்களை எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 12.09.2024-ம் தேதி இரவு 9.30 மணியளவில் அ.சா.1 குடும்பத்தினருக்கும், எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாகவும், அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், 1ம் எதிரி மணியன் அ.சா.1ஐ மண்வெட்டியால் வெட்டியதால் அவரது முதுகில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லவிட்டு, எதிரிகள் எனக்கு தெரிந்த மற்றும் எனது

ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 21.11.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.